**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C.No. 45-2025**

| | | | | |
|---|---|---|---|---|
| Deposition of LW 8 | | | Examined as : PW 5 | |
| Name | : ராகுல் | | Defence | : |
| Father/Husband Name | : ராஜேஷ் | | Court | : |
| Village | : அனந்தமங்கலம் | | Taluk | : |
| Calling | : | | | |
| Age | : 23/2026 | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 08.04.2026.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர்.

<u>முதல் விசாரணை:-</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து சலூான் கடையில் வேலை செய்து வருகிறேன். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள சாட்சி கையொப்பங்களில் என்னுடையது எதுவும் இல்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு பரிசீலனைக்கு பின்னர் அனுமதிக்கப்பட்டது.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

ஆஜர் எதிரியை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கடந்த 02.05.2024 அன்று மதியம் 02.30 மணியளவில் மயிலாடுதுறையிலிருந்து தரங்கம்பாடி செல்லும் மெயின் ரோட்டில் நடந்த விபத்து சம்பந்தமாக பொறையார் போலிசார் காவல் நிலைய குற்ற எண். 123/2024 என்ற வழக்கில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தாயர் செய்தார்கள் என்றாலும், அதில் நானும் பாலகிருஷ்ணன் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது பார்வை மகசரில் உள்ள சாட்சி கையொப்பங்களில் என்னுடையது எதுவும் இல்லை என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.**